




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 346 | 4 Pages | 12.7.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 346 | 4 பக்கங்கள் | 12.7.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

**விளக்கம்:**
**இறப்பு எனப்படுவது ஒருவனுக்குஉறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கிவிழித்துக்கொள்வதைப்போன்றது.**

## 75 வயதானால் மற்றவர்களுக்கு வழி விடுங்கள் ஆர்.எஸ்.எஸ். தலைவர் பேச்சால் பரபரப்பு



நாக்பூர், ஜூலை 12

மராட்டிய மாநிலம் நாக்பூரில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் ஆர்.எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத் பேசுகையில், "தலைவர்கள் 75 வயதில் ஓய்வு பெற வேண்டும். தாங்களாகவே ஒதுங்கி நின்று மற்றவர்களை உள்ளே வரவிடுங்கள்" என்று கூறினார்.

மோகன் பகவத்தின் இந்த பேச்சு தற்போது அரசியல் களத்தில் பல்வேறு விவாதங்களுக்கு களம் அமைத்துள்ளது. ஏனென்றால், அவரும்பிரதமர்மோடியும்2025செப்டம்பரில்75வயதைஎட்டுவார்கள் என்பதால், அவரது இந்த கருத்து எதிர்கட்சிகளுக்கு மோடியின் ஓய்வு குறித்து கேள்வி கேட்க தூண்டி இருப்பதாக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

பிரதமர் மோடிக்கு இப்போது 74 வயது ஆகிறது. ஏற்கனவே கடந்த மார்ச்மாதம்நாக்பூரில்உள்ளஆர்.எஸ்.எஸ்.தலைமைஅலுவலகத்திற்கு மோடி வந்த போதும் அவரது ஓய்வு குறித்த விவாதங்கள் எழுந்தன.

இந்நிலையில் சிவசேனா கட்சியின் எம்.பி.யான சஞ்சய் ராவத் கூறுகையில், எல்.கே.அத்வானி, முரளிமனோகர் ஜோஷி மற்றும் ஜஸ்வந்த்சிங் போன்ற தலைவர்களை 75 வயது நிரம்பிய பிறகு ஓய்வு பெற பிரதமர் மோடி கட்டாயப்படுத்தினார். இப்போது அதே விதியை அவர் தனக்கும் பயன்படுத்துகிறாரா? என்று பார்ப்போம்" என்று கூறினார்.

காங்கிரஸ்தலைவர்அபிஷேக் மனு சிங்வி கூறுகையில், "நடைமுறை இல்லாமல் பிரசங்கம் செய்வது எப்போதும் ஆபத்தானது. 75 வயது வரம்பைப் பயன்படுத்தி மார்க்தர்ஷக் மண்டலுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது என்பது கொள்கைக்கு புறம்பானது, ஆனால் தற்போதைய ஆட்சி இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாக உள்ளன" என்று கூறினார்.

முன்னதாக, ""மோடி ஜி 2029 வரை தொடர்ந்து தலைமை தாங்குவார். ஓய்வு வதந்திகளில் எந்த உண்மையும் இல்லை" என்று மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா, கடந்த மே 2023 இல் தெளிவுபடுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பெண் போலீசார் லிப்ஸ்டிக், முகத்தில் பவுடர் போட தடை பீகார் காவல்துறை அதிரடி உத்தரவு

பாட்னா, ஜூலை 12

பீகாரில் பெண் போலீசார் வேலை நேரத்தில் முகத்தில் மேக்கப், லிப்ஸ்டிக் பவுடர் ஆகியவற்றை போடக்கூடாது என்று பீகார் மாநில காவல்துறை தலைமையகம் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்து உள்ளது. மேலும் அவர்கள் பணி நேரத்தின் போது நகைகள் அணியவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

பெண் போலீசார் பணி நேரத்தின் போது சீருடையில் நகைகள் அணிந்து கொண்டும், முகத்தில் மேக்கப், லிப்ஸ்டிக், பவுடர் பூசிக்கொண்டும் 'ரீல்ஸ்' செய்யும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியானதை தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

பணியில் இருக்கும்போது பெண் போலீசார் மேக்கப், லிப்ஸ்டிக் பயன்படுத்துவதும். சீருடையை முறையற்ற வகையில் அணந்திருப்பதும் விதி மீறல் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. சமூக ஊடகங்களில் பதிவிட ரீல்ஸ் உருவாக்குதல், ஆயுதங்களை காட்சிப்படுத்துதல், பணியில் இருக்கும்போது இசை கேட்பதற்காகவோ அல்லது தனிப்பட்ட அழைப்புகளுக்காகவோ புளூடூத் சாதனங்களை பயன்படுத்துதல் ஆகியவையும் விதி மீறல்களாக பட்டியலிடப்பட்டு உள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகள் அவர்களை கடமைகளில் இருந்து திசைதிருப்பும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. பணி நேரத்தில் நகைகள் மற்றும் பிற அழகுசாதனப் பொருட்களை அணிந்து ரீல்ஸ் தயாரித்து வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை வெளியிட்ட 10 பெண் போலீசார் மற்றும் அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டு உள்ளனர். மேலும்அவர்கள்மீதுதுறைரீதியானநடவடிக்கைகளும்எடுக்கப்பட்டுள்ளன.

இந்த உத்தரவு ஆண் அதிகாரிகள் மற்றும் போலீசாருக்கும் பொருந்தும். அவர்கள் பணி நேரத்தில் சீருடைகளை முறையாக அணிய வேண்டும். மீறுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பீகார் காவல் தலைமையகம் எச்சரித்துள்ளது.

## வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 6 மாநிலங்களுக்கு ரூ.1,067 கோடி நிதி

புதுடெல்லி, ஜூலை 12

வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், கேரளா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கு ரூ.1,066 கோடியே 80 லட்சத்தை விடுவிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் அசாம் ரூ.375.60 கோடியையும், மணிப்பூர் ரூ.29.20 கோடியையும், மேகாலயா ரூ.30.40 கோடியையும், மிசோரம் ரூ.22.80 கோடியையும், கேரளா ரூ.153.20 கோடியையும், உத்தரகாண்ட் ரூ.455.60 கோடியையும் மாநில பேரிடர் மீட்பு நிதியில் இருந்து மத்திய பங்காகப் பெறுகிறது. இந்த மாநிலங்கள் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையின்போது மிக அதிக மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட அனைத்து மாநிலங்களுக்கும் தேவையான தேசிய பேரிடர் மீட்புப்படை குழுக்கள், ராணுவக்குழுக்கள் மற்றும் விமானப்படை ஆதரவு உள்ளிட்ட அனைத்து தளவாட உதவிகளையும் மத்திய அரசு வழங்கியுள்ளது. தற்போது பருவமழை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 104 தேசிய பேரிடர் மீட்புப்படை குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

# தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாட்டை மத்திய அரசு பழிவாங்குகிறது எடப்பாடி பழனிசாமியும், அவரது கட்சியும் டெல்லியுடன் நிற்கிறார்கள்: ஸ்டாலின் கருத்து

சென்னை, ஜூலை 12

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாட்டை மத்திய அரசு பழிவாங்குகிறது என்றும், எடப்பாடி பழனிசாமியும் அவரது கட்சியும் டெல்லியுடன் நிற்கிறார்கள்,

தமிழ்நாட்டுடன் அல்ல என்றும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

"நாம் ஒன்றாக எழுகிறோம் இது ஓரணி டெல்லி அணி. நமது மண், மொழி, மானம் பாதுகாக்க ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் சேருங்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்

முதல்வர்ஸ்டாலின்.உலக மக்கள் தொகை தினமான இன்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "உலக மக்கள்தொகை தினத்தன்று, மத்திய அரசுக்கு ஒரு நினைவூட்டல்: * மக்கள்தொகை கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.



* பெண்களுக்கு கண்ணியத்துடன் அதிகாரம் அளிக்கிறது, * அனைவருக்கும் சுகாதாரம் மற்றும் கல்வியை வழங்குகிறது. * நிலையான வளர்ச்சிக்கான சாம்பியன்கள். ஆனாலும், நமக்கு என்ன ஈடாகக் கிடைக்கிறது? குறைவான இடங்கள். குறைவான நிதி. நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்படும் குரல். ஏன்? ஏனென்றால் தமிழ்நாடு சரியானதைச் செய்தது.

அது டெல்லியை அச்சுறுத்துகிறது. தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாட்டை பழிவாங்குகிறது மத்திய அரசு.

இன்னும் மோசமானது, எடப்பாடி பழனிசாமியும் அவரது கட்சியும் தமிழ்நாட்டுடன் அல்ல, டெல்லியுடன் நிற்கிறார்கள். அவர்கள் நமது முன்னேற்றத்திற்காக நம்மைத் தண்டிக்கும் நியாயமற்ற எல்லை நிர்ணயத்தை ஆதரிக்கிறார்கள். ஆனால் நான் தெளிவாகச் சொல்கிறேன்.. தமிழ்நாடு தலைவணங்காது. நாம் ஒன்றாக எழுகிறோம் இது ஓரணி டெல்லி அணி. #ஓரணியில்_தமிழ்நாடு முன்னெடுப்பில் சேருங்கள். நமது மண், மொழி, மானம் பாதுகாக்க" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள்தொகை அடிப்படையில் மக்களவை தொகுதி மறுவரையறை செய்ய மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. இப்படிச் செய்தால், மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்திய தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகள் எண்ணிக்கை குறையும் எனவும், தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் குறையும் அபாயம் உள்ளது எனவும் தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதற்கிடையே, 2026 சட்டசபை தேர்தலையொட்டி, 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் பிரச்சார இயக்கத்தை முன்னெடுத்துள்ளது திமுக. தமிழ்நாடு முழுவதும் திமுகவினர் வீடு வீடாகச் சென்று பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் சேர அழைப்பு விடுத்துள்ளார் திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஸ்டாலின்.

# ரூ.40.86 கோடி 2,099 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய துணை முதலமைச்சர் உதயநிதி



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 11.57 கோடி ரூபாய்மதிப்பீட்டில்முடிவுற்ற39திட்டப்பணிகளை திறந்து வைத்து, 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2,099 பயனாளிகளுக்கு 40.86 கோடி ரூபாய் மதிப் பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் சார்பில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 40.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட் டில் கட்டப்பட்ட கீரம்பூர் வருவாய் ஆய்வாளர் அலு வலக கட்டடம், பதிவுத்துறையின் சார்பில் 1.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மல்லசமுத்திரம் சார்ப திவாளர் அலுவலகக் கட்டடம், பள்ளிக்கல்வித்து றையின் சார்பில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தத்தாதிரிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 கூடு தல் வகுப்பறை கட்டடம் மற்றும் 1 அறிவியல் ஆய் வகக் கட்டடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறையின் சார்பில் தலா 15.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓ.சௌதாபுரம், கல்லாங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவ கட்டடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்து றையின் சார்பில் 6.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்மை பொருட்கள் சேகரிப்பு மையம்,

அங்கன்வாடி மையம், உணவு தானிய கிடங்கு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டடம், மக ளிர் சுய உதவி குழு கட்டடம், ஊராட்சி செயலர் அலுவலகம், துணை சுகாதார நிலைய கட்டடம், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 77.25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாண்டமங்கலம் அரசு மேல் நிலைப் பள்ளியில் ஆய்வகத்துடன் கூடிய வகுப் பறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பள்ளிபாளையம் நகராட்சிக்குட் பட்ட ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளா கத்தில் 32.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தாக இரண்டு வகுப்பறை கட்டடங்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கொல் லிமலை வட்டாரம், வாழவந்திநாடு ஊராட்சியில் 10.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதி அங்காடி கட்டடம் என மொத்தம் 11.57 கோடி ரூபாய் மதிப் பீட்டில் 39 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்பு மிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறு மலர்ச்சித் திட்டம், அயோத்திதாசர் பண்டிதர் குடியி ருப்புகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தைநேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், இலங்கைத் தமிழர் நலன் திட்டங் களின் கீழ் 57.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம், புதிய ஒருங் கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் உள் ளிட்ட 2 பணிகளுக்கும், பேரூராட்சிகள் துறை யின் சார்பில் 25.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், தார் சாலை, அறிவுசார் மைய கட்டடம் உள்ளிட்ட 25 பணிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்து றையின் சார்பில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட் டில் சமுதாயக்கூடம், கிராம அறிவுசார் மைய கட்டடம் ஆகிய 3 பணிகளுக்கும் என மொத் தம் 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளி கள் நலத்துறையின் சார்பில் 45 மாற்றுத்திறனாளிக ளுக்கு 35.38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட் ரோல் ஸ்கூட்டர்கள், திறன்பேசி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், ஆவின் பால கம் அமைக்க மானிய உதவித்தொகையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை யின் சார்பில் 1,691 பயனாளிகளுக்கு 23.94 கோடி ரூபாய்மதிப்பீட்டில்சிறப்பு வரன்முறை திட்டத்தில் நகர்புற வீட்டுமனை பட்டாக்கள், இ பட்டா, விலை யில்லா வீட்டுமனை பட்டாக்களையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 2 பயனாளிகளுக்கு 9.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொழில் முனை வோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட் டத்தின் கீழ் நலத்திட்ட உதவியினையும், தொழிலா ளர் நலத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு 65.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டோக் கள் வாங்குவதற்கான மானியம் என பல திட்ட ப்பணிகளை தொ டங்கி வைத்தார்

# கரூர் மாவட்டம் வைரமடையில் முழு உருவச்சிலை அமைப்பதற்கு அடிக்கல்



தமிழ்நாடு மாநில விவசாய சங்க தலைவரும் முன்னாள் கரூர் நாடாளு மன்ற உறுப்பினருமான சி முத்துச்சாமி கவுண்டர் அவர்களுக்கு கரூர் மாவட் டம் வைரமடையில் முழு உருவச்சிலை அமைப்பதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது .உழவர் பெருந்தலைவர் சி. முத்துச்சாமி கவுண்டர் முழு உருவ சிலைக்கு தமிழக துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்கரூரில் காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட் டினார் .

தமிழக அரசு சார்பில் சி முத்துச்சாமி கவுண்டர் அவர்களுக்கு முழு உருவச் சிலை வைப்பதற்கு முடிவு செய்ததற்கு தமிழக அரசையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்க ளையும், அடிக்கல் நாட்டிய தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் பாராட்டி தமிழ்நாடு மாநில விவசாய சங்க சார் பில் நன்றி தெரிவிக்கும் வகை யில்

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உத யநிதி ஸ்டாலின் அவர்களை மாண்பு மிகு நீதியரசர் எம் ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு மாநில விவசாய சங்க முன்னோடி பிரமுகர் மற்றும் தொழிலதிபருமான திருப்பூர் சிபி ஆனந்த் ,தமிழ்நாடு மாநில விவசாய சங்க செயலாளர் டாக்டர் எம் ஜெய்லானி, தென்னிலை டாக்டர் என் .ரவிச்சந்திரன், கரூர் மாவட்ட விவசாயிகளின் சங்க செயலாளர் கொங்கு கே. முத்துச்சாமி ,கரூர் மாவட்ட விவசாய சங்கத் தலைவர் ஜே .கதிர் வேலன் விவசாய சங்க பிரமுகர் டி .சி. சதாசிவம் ஆகியோர் சந்தித்து நன்றியை தெரிவித்தனர். விவசாயிகளின் பாரம்பரிய சிறுதானிய உணவு வகை களையும், மரத்தில் பழுத்த மாங்கனிகனிகளையும் வழங்கி வாழ்த்துக்களையும் ,நன்றியையும் தெரிவித்தனர். அப்பொழுது கரூர் மாவட்ட திமுக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி செந்தில் பாலாஜி அவர்கள் உடன் இருந்தார்.

அப்போது தமிழ் நாடு மாநில விவசாய சங்க சார்பில் தமிழ் நாடு துணை முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர்.அதில் கீழ் கண்ட வாறு குறிப்பிட்டு இருப்பதா வது:உழவர் பெருந்தலைவர் மேன்மைமிகு சி.முத்துச்சாமி கவுண்டர் அய்யா அவர்களின் முழு உருவச் சிலை அமைக்கப் படும் வைரமடை அஞ்சூர் சாலைக்கு தமிழ்நாடு மாநில விவசாய சங்க தலைவர் உழவர் பெருந்தலைவர் சி.முத்துச்சாமி கவுண்டர் அய்யா யா அவர்க ளின் பெயரை சூட்டுமாறு லட் சக்கணக்கான விவசாயிகள் சார் பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் .

இலட்சோப லட்ச விவசாயிகள் மற்றும் கொங்கு பகுதி மக்களின் அன்புக்குரிய தலைவர் சி .முத் துச்சாமி கவுண்டர் அய்யா அவர் களை சிறப்பிக்கும் வகையில் கரூர் மாவட்டம் வைரமடை நுழைவு பகுதியில் உழவர் பெருந்த லைவர் சி முத்துசாமி கவுண்டர் அய்யா நினைவு வளைவு அமைக்குமாறு அன்புடன் வேண்டுகி றோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிரு ந்தது. மனுவை பெற்றுக்கொண்ட தமிழ் நாடு அரசு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆவன செய்வ தாக கூறினார்.




# ஊட்டி அருகே குடியிருப்பில் புகுந்த கரடி: நாய்கள் விரட்டியதால் பரபரப்பு

ஊட்டி, ஜூலை 12

ஊட்டி அருகே உள்ள எச்பிஎப் குடியிருப்பு பகுதியில் புகுந்த கரடியை நாய்கள் விரட்டி சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. நீலகிரி மாவட்டம் ஊட்டி நகரின் பல்வேறு பகுதிகளிலும் நாள்தோறும் இரவு நேரங்களில் உலா வரும் கரடிகளால் மக்கள் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர். சில சமயங்களில் பகல் நேரங்களில் மக்கள் வசிக்கும் பகுதிக்குள் வந்து விடுகின்றன. நேற்று ஊட்டி அருகே உள்ள எச்பிஎப் பகுதியில் குடியிருப்பு அருகே ஒரு கரடி பகல் நேரத்தில் உலா வந்தது. இதனை கண்ட பொதுமக்கள் சத்தம் போட்டு கரடியை விரட்ட துவங்கினர். அப்போது, சில நாய்கள் கரடியை விரட்டிச் சென்றன.



இதனால், அந்தக் கரடி குடியிருப்பு பகுதியில் இருந்து வனப்பகுதிக்குள் ஓடிச்சென்று மறைந்தது. நாய்கள் கரடியை விரட்டிச் செல்லும் வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. மேலும், எச்பிஎப் பகுதியில் அடிக்கடி மக்கள் வசிக்கும் பகுதிக்குள் வரும் கரடி மற்றும் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கடையநல்லூர் அருகே பாலஅருணாசலபுரத்தில் பராமரிப்பில்லாத அங்கன்வாடி மையத்தில் `பாம்பு': தாய்மார்கள் கலெக்டரிடம் புகார் மனு

தென்காசி, ஜூலை 12



கடையநல்லூர் ஒன்றியம் கம்பனேரி ஊராட்சி பால அருணாசலபுரத்தில் அங்கன்வாடி மையத்தில் கொடிய விஷ பாம்பு புகுந்ததால் பராமரிப்பின்றி கிடக்கும் அங்கன்வாடி மையத்தை சீரமைத்து அங்கன்வாடி மையத்திற்கு தேவையான கழிவறைகள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டுமெனகுழந்தைகளின் தாய்மார்கள் நேற்று தென்காசி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு வருகை தந்து வீடியோ ஆதாரங்களுடன் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

இது குறித்து உரிய விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் கமல் கிஷோர் உறுதி அளித்துள்ளார்.

# நடப்புப் பருவ மீன் பிடிப்புக்காக வைகை அணையில் விடப்பட்ட மீன் குஞ்சுகள்

ஆண்டிபட்டி, ஜூலை 12

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை, தேனி திண்டுக்கல் சிவகங்கை ராமநாதபுரம் ஆகிய தென்மாவட்டங்களின்பாசனத்திற்கும் குடிநீருக்கும் ஆதாரமாக விளங்கி வருகிறது. சுமார் 21 கி.மீசுற்றளவு கொண்ட வைகை அணை நீர்த்தேக்கத்தில் மீன்வளத்துறை சார்பில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, அவை வளர்ச்சி அடைந்த பிறகு தனியாருக்குடெண்டர்விடப்பட்டு மீன்கள் பிடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தினமும் பிடிக்கப்படும் மீன்களின் எண்ணிக்கையை ஈடு செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் அக்டோபர் வரையிலான 4 மாத இடைவெளியில் 20 லட்சம் மீன் குஞ்சுகள் படிப்படியாக வைகை அணை நீர்த்தேக்கத்தில் விடப்படுவது வழக்கம்.



அதன் அடிப்படையில் நடப்பு பருவத்திற்காக முதல் வாரத்தில் ஒன்றரை லட்சம் ரோகு, மிக்கால் மீன் குஞ்சுகள் விடப்பட்டன. முன்னதாக இவை வைகை அணை மீன்வளத்துறை அலுவலகத்தில் உள்ள தொட்டிகளில் லார்வா பருவம் வரை வளர்க்கப்பட்டன. வைகை நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் தட்ப வெப்ப நிலையை தாங்கும் நிலையை எட்டியது உறுதி செய்யப்பட்ட பின்பு, அவை சேகரிக்கப்பட்டு வைகை அணை நீர்த்தேக்கத்தில் மீன்வளத்துறை அதிகாரிகள் மேற்பார்வையில் விடப்பட்டன. தற்போது விடப்பட்டுள்ள குஞ்சுகள் 6 மாதங்களில் வளர்ந்து வளர்ச்சி அடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஆனி மாத பவுர்ணமி வழிபாடு சதுரகிரியில் பக்தர்கள் குவிந்தனர்

வத்திராயிருப்பு, ஜூலை 12

ஆனி மாத பவுர்ணமியையொட்டி சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலில் இன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து தரிசனம் செய்தனர். விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகே மேற்குத் தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற சுந்தரமகாலிங்கம் கோயில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ள இக்கோயில் பிரசித்தி பெற்ற சிவத்தலமாக விளங்குகிறது. இந்த மலை சித்தர்கள் வாழும் மலையாக பக்தர்கள் நம்புகின்றனர். ஆடி மற்றும் தை அமாவாசை நாட்கள் முக்கிய விஷேச நாட்களாக கருதப்படுகிறது. இந்த சமயங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வர்.



முன்பு மாதந்தோறும் அமாவாசை, பவுர்ணமிக்கு தலா 3 நாட்கள், பிரதோஷத்திற்கு 2 நாட்கள் என மொத்தம் 8 நாள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுப்படி தற்போது தினசரி பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனி மாத பவுர்ணமி தினமான இன்று காலை மலையடிவாரத்தில் கோயிலுக்குச் செல்லும் தாணிப்பாறை வனத்துறை கேட் பகுதியில் ஏராளமான பக்தர்கள் திரண்டனர். காலை 6 மணியளவில் வனத்துறை கேட் திறக்கப்பட்டு பக்தர்கள் கோயிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மலைப்பாதை வழியாக பக்தர்கள் கோயிலுக்குச் சென்றனர்.

முன்னதாக வனத்துறை ஊழியர்கள் பக்தர்களின் உடைமைகளை சோதனை செய்து, ‘அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு செல்லக் கூடாது, இரவில் கோயிலில் தங்கக் கூடாது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவுறுத்தினர். பவுர்ணமியை முன்னிட்டு, சுந்தரமகாலிங்கம் சுவாமிக்கு சந்தனம், பால், இளநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டன. அதன் பின் சர்வ அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதற்காக ஏற்பாடுகளை கோயில் பரம்பரைஅறங்காவலர்,நிர்வாக அதிகாரி ஆகியோர் செய்திருந்தனர்.

# உலக நன்மைக்காக ராமேஸ்வரம் கோயிலில் ஜப்பான் பக்தர்கள் பூஜை

ராமேஸ்வரம், ஜூலை 12

உலக நன்மை வேண்டி ஜப்பான் பக்தர்கள் 000 ராமேஸ்வரத்தில் சிறப்பு பூஜை நடத்தி ராமநாதசுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு செய்தனர். ஜப்பான் தலைநகர் டோக்கியோ பகுதியை சேர்ந்த ஜப்பானிய சிவா ஆதீனம் பால கும்ப குரு முனியின் தலைமையில் அவர்களது சீடர்கள் 20 பேர், இந்தியாவில் உள்ள கோயில்களில் சிறப்பு பூஜை வழிபாடு நடத்த கடந்த 3 வாரங்களுக்கு முன்பு கிளம்பி வந்தனர். இவர்கள் முதலில் புதுச்சேரியில் உள்ள பிரத்தியங்கிரா தேவி கோயிலில் உலக நன்மைக்காக பூஜை வழிபாடு நடத்தினர். தொடர்ந்து கும்பகோணம், பழநி ஆகிய பகுதிகளில் உள்ள முக்கிய கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தினர். திருச்செந்தூர் முருகன் கோயில் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு முருகனை தரிசித்து பின் நேற்று முன்தினம் ராமேஸ்வரம் வந்தனர். அதிகாலையில் அக்னி தீர்த்த கடலில் புனித நீராடிவிட்டு கோயில் உள்ளே உள்ள 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடினர். பின் ராமநாதசுவாமி கோயில் எதிரேதனியார் மண்டபத்தில் கோயில் ருத்ரா ஹோம பூஜை செய்தனர். அதை தொடர்ந்து கோயில் உள்ளே விஸ்வரூப ஆஞ்சநேயர், ஆத்மலிங்கம், வல்லப விநாயகர், முருகர், நந்தீஸ்வரர் ஆகிய சன்னதிகளில் வழிபட்டு பின் ராமநாத சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வணங்கினர். பின் பர்வதவர்த்தினி அம்பாள், பள்ளி கொண்ட பெருமாள் சுவாமிகளை தரிசனம் செய்து உலகப் பிரசித்தி பெற்ற மூன்றாம் பிரகாரத்தை பார்வையிட்டனர்.



ஆன்மீக பயணம் குறித்து ஜப்பானிய சிவா ஆதீனம் பால கும்ப குரு முனியின் கூறுகையில், ‘‘இந்து கோயில்களை வழிபடுவதில் மன அமைதியும், ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதேபோல் சீடர்களுடன் இந்தியா வந்து இந்து கோயில்களில் வழிபாடு நடத்தி தரிசனம் செய்கிறோம். உலக அமைதி ஏற்பட்டு அனைவரிடத்திலும் ஆன்மிகம் வளர வேண்டும்’’ என்றார்.

# ஸ்டிரைக்கால் ‘ஆப்செண்ட்’; மார்க்கெட்டில் ரூ.2 கோடி வர்த்தகம் பாதிப்பு

ஒட்டன்சத்திரம், ஜூலை 12

பொது வேலைநிறுத்தத்தையொட்டி கேரளா உள்ளிட்ட வெளிமாநில வியாபாரிகள் வராததால், ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் நேற்று ரூ.2 கோடிக்கு மேல் வர்த்தகம் பாதிப்பு ஏற்பட்டது. ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் நேற்று வேலைநிறுத்த போராட்டத்தை நடத்தின. தமிழகத்தை பொறுத்தவரை இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல், அனைத்து பகுதிகளிலும் பஸ்கள் வழக்கம் போல இயங்கின. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உள்ள காந்தி காய்கறி மார்க்கெட்டில் உள்ளூர், வெளிமாவட்ட வியாபாரிகள் மட்டுமல்லாமல் கேரளா, ஆந்திரா, கர்நாடகா வியாபாரிகளும் வந்து காய்கறிகள் வாங்கி செல்வர். குறிப்பாக கேரளாவிற்கு அதிகளவு காய்கறிகள் அனுப்பப்பட்டு வருகிறது.

தொழிற்சங்கங்களின் பொது வேலைநிறுத்தத்தால் நேற்று கேரளா உள்ளிட்ட வெளிமாநில வியாபாரிகள் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டுக்கு கொள்முதல் செய்ய வரவில்லை. விவசாயிகளும் தங்கள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வராமல் தோட்டங்களில் இருப்பு வைத்துக் கொண்டனர்.

இதனால் நேற்று மட்டும் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் ரூ.2 கோடிக்கு மேல் வர்த்தகம் பாதிக்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# சைதாப்பேட்டையில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, ஜூலை 12

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு 139 மற்றும் 142க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைத்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 139க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் தெருவில் ரூ.72 லட்சம் மதிப்பீட்டில் சாரதி நகர் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டுப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, ஜாபர்கான்பேட்டை, ஆர்.வி. நகர், 69 மற்றும் 75வது தெருவில் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் வடிகால்களை இடித்து விட்டு, புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, ராகவன் காலனி, 2வது லிங்க் தெருவில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மருந்து சேமிப்புக் கிடங்கு கட்டுமானப் பணி ஆகியவற்றினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். தொடர்ச்சியாக, வார்டு142க்குட்பட்ட சம்பந்தம் தெரு, நடராஜன் தெருவில் ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும்பணி, மேற்கு ஜோன்ஸ் சாலை, இன்டஸ் மற்றும் ஷேன்சைன் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோரப் பூங்கா மேம்படுத்தும் பணி ஆகியவற்றினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், சுப்பிரமணிய சாலையில் ரூ.16.40 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 250 Kv திறன் கொண்ட மின்மாற்றியினை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, மண்டல அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அஞ்செட்டி அருகே பரபரப்பு; தாறுமாறாக ஓடி விபத்தில் சிக்கிய கர்நாடக அரசு பஸ்: 25 பயணிகள் உயிர் தப்பினர்



ஓசூர், ஜூலை 12

ஒகேனக்கல் நோக்கி சென்ற கர்நாடக அரசு பஸ், பிரேக் பிடிக்காமல் தாறுமாறாக ஓடி வனப்பகுதியில் உள்ள மண் திட்டின் மீது மோதி நின்றது. இந்த விபத்தில் 25 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். கர்நாடக மாநிலம், கனகபுராவில் இருந்து அம்மாநில அரசு பஸ், 25 பயணிகளுடன் நேற்று தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் நோக்கி வந்து கொண்டிருந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி காவல் நிலையம் அடுத்துள்ள சீங்கோட்டை பகுதியில் அந்த பஸ் வந்தபோது, திடீரென பிரேக் பிடிக்காமல் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி, சாலையோர வனப்பகுதிக்குள் புகுந்தது. அங்கிருந்த மண் திட்டின் மீது மோதி நின்றது.

இந்த விபத்தில் நடத்துனர் உட்பட 3 பேருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டது. மற்ற பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். காயம் அடைந்த 3 பேரை, பயணிகள் மீட்டு அஞ்செட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மண் திட்டின் மீது பஸ் மோதி நின்றதால், பெரும் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த விபத்து குறித்து அஞ்செட்டி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தேன்கனிக்கோட்டை அருகே யானை தாக்கி விவசாயி பலி: டோலி கட்டி உடலை தூக்கி வந்தனர்





தேன்கனிக்கோட்டை, ஜூலை 12

தேன்கனிக்கோட்டை அருகே, காட்டு யானை தாக்கியதில் விவசாயி பலியானார். ஆம்புலன்ஸ் செல்ல முடியாததால், டோலி கட்டி சடலத்தை சுமார் 1 கிமீ தூரம் தூக்கி வந்து வாகனத்தில் கொண்டு சென்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை குந்துக்கோட்டை அருகே யுள்ள குடிசல்பைல் கிராமத்தை சேர்ந்தவர் ஹேமன்னா (65). இவர் பழங்குடியின வனக்குழு தலைவராக இருந்தார். விவசாயத்துடன் மாடுகளையும் வளர்த்து வந்தார். நேற்று முன்தினம் மேய்ச்சலுக்கு சென்ற ஒரு மாடு வீடு திரும்பவில்லை. அதனால் மாலையில் ஹேமன்னா, மாட்டை தேடி வனப்பகுதிக்கு சென்றுள்ளார். சிறிது நேரத்தில் மாடு வீட்டுக்கு வந்து விட்டது.

னால் இரவு முழுவதும் ஹேமன்னா வீட்டிற்கு வராததால் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து நேற்று காலை, ஹேமன்னா குடும்பத்தினர் மற்றும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் வனப்பகுதிக்குள் சென்று அவரை தேடினர்.

அப்போது பனைகாப்புக் காடு மேட்டுக்கல் தடம் என்ற இடத்தில் ஹேமன்னா, காட்டு யானை தாக்கி உயிரிழந்து கிடந்துள்ளார். இதுகுறித்து அப்பகுதி மக்கள், அஞ்செட்டி வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதனையடுத்து அஞ்செட்டி வனச்சரகர் கோவிந்தன் தலைமையில் வனவர் ராஜமாணிக்கம், வனக்காப்பாளர் சிவக்குமார், தேன்கனிக்கோட்டை டிஎஸ்பி ஆனந்தராஜ், இன்ஸ்பெக்டர் கணேஷ்குமார், எஸ்ஐ நாகராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு விசாரணை நடத்தினர்.

அப்பகுதிக்கு ஆம்புலன்ஸ் வாகனம் செல்ல முடியாது என்பதால், அவரது சடலத்தை பொதுமக்கள் டோலி கட்டி ஒரு கிமீ தூரம் தூக்கி வந்தனர். பின்னர் அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து தேன்கனிக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்திவருகின்றனர். உயிரிழந்த ஹேமன்னாவுக்கு நஞ்சம்மாள் என்ற மனைவியும், பசவராஜ் என்ற மகனும் வசந்தா என்ற மகளும் உள்ளனர்.

# பாக்கு தோட்டத்திற்குள் புகுந்து உணவு தேடிய காட்டு யானை: கிராம மக்கள் அச்சம்



கோவை, ஜூலை 12

கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைகளை ஒட்டிய வனப்பகுதியில் காட்டு யானை உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. வனப்பகுதியில் இருந்து வெளியே வரும் காட்டு யானைகள் அடிக்கடி, உணவு மற்றும் தண்ணீர் தேடி வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களுக்குள்நுழைந்து விடுகின்றன. இதனிடையே, கடந்த சில நாட்களாக கெம்பனூர், ஓணாப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஒற்றை ஆண் காட்டு யானை, குடியிருப்பு பகுதிகள் நிறைந்த பகுதிகளில் இரவு நேரங்களில் தனியாக சுற்றித்திரிந்து வருகிறது. இந்த நிலையில், வனப்பகுதியில் இருந்து வெளியேறிய அந்த ஆண் காட்டு யானை, ஓணாப்பாளையம் கிராமத்திற்குள் புகுந்தது. அப்பகுதியில் உள்ள ஒரு விவசாய தோட்டத்திற்குள் நுழைந்த அந்த யானை, உணவு தேடி சுற்றியது.

இந்த காட்சிகள் அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் வனத்துறையினர் அங்கு சென்று, காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்டியடித்தனர். தோட்டத்து வீடுகளில் ஆட்கள் வசித்து வரும் நிலையில் காட்டு யானை அடிக்கடி நுழைந்து விளை பொருட்களையும், ரேசன் அரிசி, கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட பொருட்களை சாப்பிட்டு வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கிராமங்களுக்குள் காட்டு யானைகள் நுழைவதை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பள்ளப்பட்டி ஊராட்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி

திண்டுக்கல், ஜூலை 12

தமிழக அரசால், செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், பள்ளப்பட்டி ஊராட்சி பகுதியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழக அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவ திட்டம், காலை உணவுத்திட்டம், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம், அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள், ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், உயர்த்தப்பட்ட மகப்பேறு நிதியுதவி திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கான பராமரிப்பு நிதியுதவி திட்டம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படங்கள் வைக்கப்பட்டன.

# உலக மக்கள் தொகை தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி மற்றும் வாகனம்: கலெக்டர் கொடியசைத்து துவக்கினார்



ஈரோடு, ஜூலை 12

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நலச் செயலகம் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி, விழிப்புணர்வு உறுதிமொழி, பேரணி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சரியான வயதில் திருமணம் (21 வயதிற்கு மேல்) மற்றும் இரண்டு குழந்தைகளுக்கு இடையிலான பிறப்பு இடைவெளி (குறைந்தது 3 ஆண்டுகள்) ஆகியன தாய் மற்றும் சேய் நலனில் முக்கிய பங்காற்றுகின்றன என்பன குறித்த விழிப்புணர்வு, இளவயது திருமணத்தால் ஏற்படும் பாதிப்பு மற்றும் கருத்தடை முறைகள் பற்றியும் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

உலக மக்கள் தொகை தினம் 2025 க்கான கருப்பொருள் ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு, திட்டமிட்ட பெற்றோர்கான அடையாளம் ஆகும். முழக்கம் (ஸுடுமுயு) உடலும் மனமும் பக்குவமடைந்து உறுதியாகும் வயது 21 அதுவே பெண்ணிற்கும், திருமணத்திற்கும், தாய்மை அடைவதற்கும் உகந்த வயது என்பதாகும். உலக மக்கள் தொகை நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்ற 3 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு குறித்த விளக்க கையேடு மற்றும் மரக்கன்றுகளை வழங்கினார். செவிலியர் பயிற்சி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற குடும்ப நல விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் செவிலியர் கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பெற்ற பெண் சிசுவை பேணி காப்போம், நவீன வாசக்டமி செய்து கொள்வோம், பெண்களின் சுமையை குறைப்போம், முதல் குழந்தை அவசியம், இரண்டாவது குழந்தை ஆடம்பரம், மூன்றாவது குழந்தை ஆபத்து, ஆணும், பெண்ணும் சமம், ஆண்களே ஏற்பீர் குடும்ப நலம், ஆண் அறுவை சிகிச்சையை ஊக்குவிப்போம், இளம் வயது திருமணத்தை தடுப்போம், பெண்ணுக்கு ஏற்ற திருமண வயது 21 உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர். இப்பேரணியானது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கி காலிங்கராயன் இல்லம் வரை சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நல செயலகம் சார்பில் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# உலக மக்கள் தொகை தினம் விழிப்புணர்வு பேரணி மாவட்ட கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



திண்டுக்கல், ஜூலை 12

திண்டுக்கல் மாவட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சுகாதார துறையின் சார்பில் உலக மக்கள் தொகை தினம்(ஜூலை 11) முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் செ.சரவணன், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

1987ம் ஆண்டு, ஜூலை மாதம் 11ம் தேதி உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. பெருகி வரும் மக்கள் தொகை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த நாள் உலக மக்கள் தொகை தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டம் 1956ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பல துறைகளின் கூட்டு முயற்சியால் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நமது நாட்டின் வளர்ச்சிக்கும், நமது பொருளாதார தேவையை பூர்த்தி செய்வதற்கும் அடிப்படையாக அமையும் மக்கள்தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு, அரசு எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். முக்கியமாக களப்பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் ஒவ்வொரு பகுதிகளிலும் இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்களின் விபரங்களின் அடிப்படையில் அந்தப்பகுதிகளில் தீவிரமாக களப்பணி மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அதிக குழந்தைகள் இருப்பதனால் ஏற்படும் உடல் ரீதியான பிரச்சனைகள் மற்றும் அவர்களின் குடும்ப வாழ்வாதாரம் பற்றி களப்பணியாளர்கள் விரிவாக எடுத்துரைக்க வேண்டும்.

அரசு சார்பில் அறிவிக்கப்படும் திட்டங்கள் மூலம், பொது மக்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதற்கும், தாங்களாகவே முன்வந்து சமூகத்தின் நலன் கருதி செயல்பட வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இப்பேரணியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள், ஜீ.டி.என் கல்லூரி செவிலியர் பயிற்சி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு திட்டமிட்ட பொற்றோருக்கான அடையாளம் மற்றும் உடலும் மனதும் பக்குவமடைந்து உறுதியாகும் வயது 21 அதுவே பெண்ணுக்கு திருமணத்திற்கும் தாய்மை அமைவதற்கும் உகந்த வயது குறித்த விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தி சென்றனர். விழிப்புணர்வு பேரணி பூமார்கெட், காமராஜர் சிலை வழியாக சென்று அரசு மருத்துவக் கல்லுரி மருத்துவமனை அருகில் நிறைவடைந்தது. தொடர்ந்து, குடும்ப கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வு கையேட்டினை பொதுமக்களுக்கு மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை துணை இயக்குநர் கௌசல்யா, திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லுரி மருத்துவமனை முதல்வர் சுகந்தி ராஜகுமாரி, நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.உதயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குளம் பேரூர் திமுக இளைஞர் அணி சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா: திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம்



ஆலங்குளம் ஜூலை 12

தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் பேரூர் திமுக இளைஞர் அணி சார்பில் தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்கு ஆண்டும் திராவிட மாடல் அரசு சாதனை விளக்க தெரு முனைக்கூட்டம் நடைபெற்றது.

ஆலங்குளம் பேரூர் கழக செயலாளர் எஸ் பி டி நெல்சன் தலைமை தாங்கினார்.

தென்காசி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி ஆர் கிருஷ்ணராஜா, நகர அவைத்தலைவர் எம் எம் ஜோசப், ஒன்றிய குழு உறுப்பினர் ஆலடி எழில்வாணன், ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யமணிகண்டன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம் சிவக்குமார், கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பொன்செல்வன், கீழப்பாவூர்தெற்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர்.

தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வே. ஜெயபாலன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திமுக நாடு போற்றும் நான்கு ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு சாதனைகளை விளக்கி பேசினார்.

தலைமை கழக பேச்சாளர் கவிஞர் மூர்த்தி, வெல்டிங் மாரியப்பன், என் எஸ் சாகுல்ஹமீதுகான் ஆகியோர் திமுகவின் கொள்கை பற்றி நான்கு ஆண்டு சாதனைகளை பட்டியலிட்டு பேசினார்கள். நிகழ்ச்சியில் நகர கழக நிர்வாகிகள் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் பாப்புலர் செல்லத்துரை, பகுத்தறிவு பாசறை ராசையா, நகர வர்த்தக அணி எஸ் செல்வம், மாவட்ட பிரதிநிதி சாமுவேல், ராஜா, ஜெயபாலன், ஜாகிர் உசேன், தகவல் தொழில் நுட்ப அணி ஏ. பிரபாகரன், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிவமணிகண்டன், சங்கர், கபிலன், முருகன், இசக்கிமுத்து, மற்றும் சாலமோன் எஸ்.கோபி, உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் யாபேஸ் பிரேம்குமார் நன்றி கூறினர்.

# மேலூரில் த.வெ.க சார்பில் அழகுமுத்துக்கோன் குருபூஜை விழா



மேலூர் ஜூலை.12

தமிழக வெற்றி கழகம் மேலூர் சட்டமன்ற தொகுதி மேலூர் நகர் கழகம் சார்பில் முதல் இந்திய சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 268 வது குருபூஜை விழா மேலூர் பஸ் நிலையம் முன்பு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மேலூர் நகர் செயலாளர் ஜி.பிரசாத் தலைமை தாங்கினார். மாவட்ட புறநகர் கழகச் செயலாளர் விஷால் கிருஷ்ணா, மாவட்ட பொருளாளர் மணிமாறன், மாவட்டம் துணைச் செயலாளர் தினகரன், மேலூர் ஒன்றிய தலைமை மனோஜ் குமார், மகளிர் அணி சுபாஷினி, கத்தீஜா, நகர் நிர்வாகிகள் குமார், அருள், குரு சந்தோஷ், மாவட்ட அமைப்பாளர்கள் பால்பாண்டி, கோபால் கிருஷ்ணன், முனீஸ், காளீஸ்வரன், ஆகியோர் மேலூர் பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர் நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மருத்துவ முகாம் மற்றும் நடமாடும் மருத்துவ வாகனம்: கலெக்டர் துவக்கினார்




இராமநாதபுரம், ஜூலை 12

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு சுகம் அறக்கட்டளை மற்றும் பாரத வங்கி இணைந்து ஆர்.எஸ். மங்கலம் வட்டத்தில் மருத்துவ முகாம் நடைபெறுவதற்கான நடமாடும் மருத்துவ வாகனத்தை மாவட்ட கலெக்டர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

இவ்வாகனத்தில் பொதுமக்கள் உடல் பரிசோதனை கருவிகள் மற்றும் ஆய்வகங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளதன் மூலம் மக்கள் வசிப்பிடங்களுக்கு நேரடியாக சென்று மருத்துவ பரிசோதனை செய்யும் வசதி உள்ளதால் பொதுமக்களுக்கு இச்சேவை பயனுள்ளதாக இருக்கும். நடமாடும் மருத்துவ வாகனம் தங்கள் பகுதிக்கு வரும்பொழுது பொதுமக்கள் தங்கள் உடல் நிலையை பரிசோதனை செய்து கொண்டு ஆரோக்கியமாக இருந்திட வேண்டுமென செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உலக மக்கள் தொகை தின உறுதிமொழி: கலெக்டர் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது



தருமபுரி, ஜூலை 12

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் தருமபுரி குடும்ப நல இயக்ககம் சார்பில் உலக மக்கள் தொகை தினம் 2025 உறுதிமொழி மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உலக மக்கள் தொகை தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்தாண்டு ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு திட்டமிட்ட பெற்றோர்கான அடையாளம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்கப்படுகிறது.

உலக மக்கள் தொகை தினம் 2025 உறுதிமொழியான நமது தாய்நாட்டின் மொத்த மேம்பாட்டிற்கும், தாய்மார்களின் நல்வாழ்விற்கும், குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும், மக்கள் தொகை பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துதல் முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும் என்பதை நான் அறிந்துள்ளேன். சிறுகுடும்ப நெறி, திருமணத்திற்கேற்ற வயது, முதல் குழந்தையை தாமதப்படுத்த மேற்கொள்ள வேண்டிய குடும்ப நலமுறைகள், முதல் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் இடையே தேவையான இடைவெளி, ஒரு பெண் கருவுற்ற காலத்தில் வீட்டில் மேற்கொள்ள வேண்டிய சாதகமான சூழ்நிலையை உருவாக்குதல், தாய் சேய் நலத்தை பாதுகாத்தல், பெண் கல்வியை மென்மேலும் ஊக்குவித்தல், ஆணும் பெண்ணும் சமம் என்பதற்கு செயல் வடிவம் கொடுத்தல், பெண் சிசுக் கொலையை தடுத்தல், இளம் வயது திருமணத்தை தடுத்தல், இளம் வயது கர்ப்பத்தை தடுத்தல், மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைத்தல், சுற்றுப்புற சூழல் பாதிப்பை தடுத்தல், மரம் வளர்ப்பதை ஊக்குவித்தல், வறுமை ஒழிப்பு போன்ற செய்திகளை அனைவருக்கும் எடுத்துக் கூறுவதில் என்னை நான் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வேன் என உறுதி அளிக்கிறேன்.

குடும்ப நலத் திட்டங்களை மக்கள் இயக்கமாக மலரச் செய்ய என்னை நான் முழுமையாக அர்பணித்துக் கொள்வேன் எனவும் உறுதியளிக்கிறேன். என்ற உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையேற்று வாசிக்க அரசுத் துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பணியாளர்கள் பின் தொடர்ந்து வாசித்து உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

# திருநெல்வேலி மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணி




திருநெல்வேலி, ஜூலை 12

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

1987 ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை 500 கோடியை தாண்டி விட்டது என்ற அபாய எச்சரிக்கையை மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஐ.நா.சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ம் நாளை உலக மக்கள் தொகை தினமாக அறிவித்தது. அதன் ஒரு பகுதியாக, பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் உலக மக்கள் தொகை தின உறுதிமொழி ஏற்றுதுடன் விழிப்புணர்வு ரதம் மற்றும் செவிலியர் பயிற்சி மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டது.

இப்பேரணியில் திருநெல்வேலி அரசு கலை பண்பாட்டுத்துறை கலைஞர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தனர். பேரணியில் மாணவிகள் குடும்ப நலம் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கொண்டு சென்றனர். மேலும், குடும்பநலம் மற்றும் தாய்சேய் நல சேவைகளை தங்கு தடையின்றி வழங்குவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை முதல்வர் மரு.ரேவதி பாலன் அவர்கள், இணை இயக்குநர் (பொ) மருத்துவம் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் மரு.லதா அவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர் (பொ) மரு.வேல்முருகன் கணேஷ் மற்றும் துணை இயக்குநர்கள் மரு.துரை (காசநோய்), அலர்சாந்தி (தொழுநோய்), மாநகர நல அலுவலர் மரு.ராணி, மாவட்ட குடும்ப நலத்துறை சார்ந்த மக்கள் கல்வி தகவல் அலுவலர் (பொ) ஜெயசித்ரா, இளநிலை நிர்வாக அலுவலர் கூத்தநயினார் (எ) செந்தில், புள்ளிவிபர உதவியாளர் வேலு உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தஞ்சாவூரில் 100 தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

தஞ்சாவூர், ஜூலை 12

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), தஞ்சாவூர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் துணைத் தலைவர் கனிமொழி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி தெரிவித்ததாவது. தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. தூய்மைப் பணியாளர்களின் பணி அர்ப்பணிப்பு மிக்க பணியாக உள்ளது. குறிப்பாக, கொரோனா போன்ற பேரிடர் காலத்தில், தங்கள் உயிரை துச்சமென எண்ணி தூய்மைப் பணியினை சிறப்பாக மேற்கொண்டு இலட்சக்கணக்கான மக்களின் இன்னுயிர்களை காத்துள்ளார்கள். இத்தகைய சிறப்பு மிக்க தூய்மைப் பணியாளர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் அரசின் சார்பில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் தங்களின் மேம்பாட்டிற்கான செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, தாட்கோ மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த பணியின் போது ஒருகையினை இழந்த தூய்மைப் பணியாளருக்கு இழப்பீடு தொகையாக ரூ.1,00,000 க்கான காசோலையும், ஒரு தூய்மைப் பணியாளரின் மகளுக்கு ரூ.1,500 கல்வி உதவித்தொகையும், 100 தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகள் என மொத்தம் 102 தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

12.7.2025

# அஞ்செட்டி வட்டம், மாவனட்டி கிராமத்தில் 7 வகுப்பு படிக்கும் மாணவிக்கு இருதய அறுவை சிகிச்சை: கலெக்டர் சால்வை அணிவித்து வாழ்த்து



கிருஷ்ணகிரி, ஜூலை 12

கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், மாவனட்டி கிராமத்தை சேர்ந்த பிரகாஷ், மஞ்சுளா மகள் மதுமிதா மாவனட்டி அரசு நடுநிலைப்பள்ளியில் 7 வகுப்பு படித்து வந்த நிலையில், கடந்த 23.10.2024 அன்று தேசிய சிறார் நலத்திட்டத்தின் கீழ் பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மாணவிக்கு இருதய கோளாறு இருப்பதை கண்டறிந்தனர்.

அதனையடுத்து, தொடர் சிகிச்சை பெற்று வந்த மாணவி கடந்த 13.06.2025 அன்று அஞ்செட்டி வட்டம், கேரட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட கலெக்டரிடம், மாணவியின் பெற்றொர் தங்கள் மகளுக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள உதவிடுமாறு மனு அளித்ததையடுத்து, உடனடி நடவடிக்கையாக மாவட்ட கலெக்டரின் உத்தரவின் பேரில், மாணவியின் பெற்றோருக்கு புதியதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டு, சேலம் தனியார் மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாணவிக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்டு தற்போது நலமுடன் உள்ளார்.

இந்நிலையில் மாணவி மதுமிதா மற்றும் பெற்றோர்கள் மாவட்ட கலெக்டரை 10.07.2025 அன்று சந்தித்து நன்றி தெரிவித்தனர். தொடர்ந்து மாவட்ட கலெக்டர் மாணவிக்கு சால்வை அணிவித்து இனிப்பு வழங்கி நல்ல முறையில் கல்வி பயில வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

# முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறப்பால் வைகை அணையின் நீர் மட்டம் உயர்வு




மதுரை, ஜூலை 12

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறப்பால் வைகை அணையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 1597 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் விநாடிக்கு 3937 கன அடியாகவும் உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (12.7.2025)

**மேஷம்:** எதிர்பார்த்த வேலைகள் நிறைவேறும். வருமானம் திருப்தியாகும். புதிய திட்டங்களை துவக்க நல்ல நாள்.

**துலாம்:** குடும்பத்தில் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சிக்கல்கள் நீங்கும். நண்பர்கள் உதவி தருவார்கள். பரிகாரம்: சக்தி ஆலய தரிசனம் செய்யவும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் சாந்தி நிலவும். உறவினர் ஆதரவு கிடைக்கும். பண வரவு சீராகும். பரிகாரம்: துர்கை தேவிக்கு நீராட் செய்து பூஜை செய்யவும்.

**விருச்சிகம்:** செலவுகள் கூடும். மன அழுத்தம் ஏற்படலாம். பொறுமை தேவை. வாகனத்தில் கவனம். பரிகாரம்: சனீஸ்வரனை வழிபடவும்.

**மிதுனம்:** வருமானத்தில் முன்னேற்றம். வியாபார வளர்ச்சி. பயணங்கள் சாதகமாகும். பரிகாரம்: நவகிரகங்களை தரிசிக்கவும்.

**தனுசு:** பண வருமானம் திருப்தியாக இருக்கும். கல்வியில் வெற்றி. புதிய வாய்ப்புகள் தேடி வரும். பரிகாரம்: தட்சிணாமூர்த்திக்கு அர்ப்பணை.

**கடகம்:** உணர்ச்சி ஓட்டத்தை கட்டுப்படுத்தவும். குடும்பத்தில் அமைதி தேவை. சிக்கனமாக செலவழிக்கவும்.

**மகரம்:** தொழிலில் முன்னேற்றம். புது ஒப்பந்தங்கள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. பரிகாரம்: விஷ்ணுவுக்கு அர்ச்சனை செய்யவும்.

**சிம்மம்:** சகோதரர்கள் வழி உதவி வரும். எதிரிகள் தாமே விலகுவர். மனஅமைதி கிடைக்கும். பரிகாரம்: சூரியனை வழிபடவும்.

**கும்பம்:** நண்பர்களால் நன்மை. வழக்குகள் சாதகமாக முடியும். திட்டங்கள் வெற்றி பெறும். பரிகாரம்: ஆஞ்சநேயரை தரிசிக்கவும்.

**கன்னி:** வேலைக்குச் செல்வோர்களுக்கு சிறப்பான நாள். கல்யாண பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறும். பரிகாரம்: வியாழனை போற்றி பூஜை செய்யவும்.

**மீனம்:** வீட்டில் திருவிழா சூழல். தெய்வ அனுகிரகம் அதிகரிக்கும். மன அமைதி ஏற்படும். பரிகாரம்: துர்கை அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

# ஐஸ்ஹவுஸ் பகுதியில் ஆவின் பாலகத்தை உடைத்து பணத்தை திருடிய வழக்கில் தலைமறைவு குற்றவாளி கைது

சென்னை, ஜூலை 12

சென்னை, ஐஸ்ஹவுஸ் பகுதியில் வசித்து வந்த சக்திவேல், வ/45, த/பெ.பழனி என்பவர் ஐஸ்ஹவுஸ், டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள ஆவின் பாலகத்தை லீசுக்கு எடுத்து நடத்தி வருகிறார். இவர் கடந்த 08.03.2024 அன்று இரவு, மேற்படி கடையை பூட்டிவிட்டு, மறுநாள் (09.03.2024) அதிகாலை பார்த்தபோது, கடையின் ஷட்டர் பூட்டை உடைத்து, கடையில் வைத்திருந்த பணம் ரூ.14,000/ஐ யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது.

இது குறித்து சக்திவேல், 3 ஐஸ்ஹவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவில் கடந்த 09.03.2024 அன்று கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

3 ஐஸ்ஹவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.மணிகண்டன், 2.விக்னேஷ் ஆகிய 2 நபர்களை கடந்த 05.11.2024 அன்று கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையில் மணிகண்டன், விக்னேஷ், சூரிய பிரசாத் ஆகிய 3 நபர்கள் சேர்ந்து, கடையை உடைத்து, பணத்தை திருடி, செலவு செய்தது தெரியவந்தது.

மேலும், 3 ஐஸ்ஹவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட தலைமறைவு எதிரி 3.சூரிய பிரசாத், வ/22, கோடம்பாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி சூரியபிரசாத் மீது ஏற்கனவே 1 திருட்டு வழக்கு உள்ளது தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சூரியபிரசாத் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# வீரன் அழகுமுத்துக்கோனின் 268ஆம் ஆண்டு குருபூஜை





முதல் சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் அழகுமுத்துக்கோனின் 268 ஆம் ஆண்டு குருபூஜையொட்டி, அரியலூர் அண்ணா சிலை அருகிலுள்ள சக்தி விநாயகர் ஆலயம் முன் அவரது திருவுருவப் படம் அழகாக அலங்கரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், மாவட்ட யாதவ மகா சபை நிர்வாகிகள், கோகுல மக்கள் கட்சி அரியலூர் மாவட்டத் தலைவர் முனியமுத்து, மாவட்டச் செயலாளர் ஏ.முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து, பின்பு மலர் தூவி மாவீரருக்கு மரியாதை செலுத்தினர். பின்னர், 200க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா கோகுல மக்கள் கட்சி சார்பில் நடைபெற்றது. விழாவினை மாவட்டத் தலைவர் முனியமுத்து, செயலாளர் ஏ.முருகன் ஆகியோர் தலைமை ஏற்று துவக்கி வைத்தனர். இந்த நிகழ்வில் யாதவ மகா சபையின் பல்வேறு நிலை நிர்வாகிகள், பொது மக்கள் மற்றும் சமூகஆர்வ லர்கள் கலந்து கொண்டு வீரவணக்கத்தை செலுத்தினர்.

# காரமடை நகர இளைஞரணி மற்றும் நகர திமுக சார்பில் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

கோவை வடக்கு மாவட்டம் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி காரமடை நகர இளைஞரணி மற்றும் நகர திமுக சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள்விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் காரமடை தெற்கு ரத வீதியில் காரமடை நகர செயலாளர் இரா. வெங்கடேஷ், கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் ஆகியோர் தலைமையில் நகர இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன் மாவட்ட பிரதிநிதி மு.சா.யாசர் அராபத் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் உஷா வெங்கடேஷ்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விக்னேஷ், சூரியன் தம்பி ,நகர துணை அமைப்பாளர்கள் ராம்குமார் ,சுபாஷ், சர்ஜுன், நித்தியானந்தன், பரத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமைக் கழக பேச்சாளர்கள் சேலம் கோவிந்தன் , செ. தக்ஷிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சி.ஆர்.ராமச்சந்திரன் , பா.அருண்குமார், வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத்தலைவர் கே.மனோகரன், மீனவரணி அமைப்பாளர் ராம் குட்டி ,கழகப் பேச்சாளர் பெ.நாராயணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இதில் நகர, வார்டு, பூத் கழக நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் மற்றும் உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கூட்டத்தின் நிறைவில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆசிப் மற்றும் முன்னாள் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஆர்.பத்ரி ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள்.

# ''அவருடன் பணிபுரிந்தது 'மறக்க முடியாத அனுபவம்''' கியாரா அத்வானி பாராட்டும் நடிகர் யார்?



சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களின் உற்சாகத்தை அதிகரித்திருந்தது. இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது முடிந்துள்ளநிலையில், ஹிருத்திக் ரோஷனுடன் பணிபுரிந்தது மறக்க முடியாத அனுபவம் என்று கியாரா அத்வானி தெரிவித்திருக்கிறார் .

கியாரா அத்வானி தனது எக்ஸ் பக்கத்தில், "ஹிருத்திக் உங்களுடன் திரையைப் பகிர்ந்து கொண்டது மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

ஆதி சார், அயன், ஜூனியர் என்.டி.ஆர் மற்றும் அற்புதமான குழுவினர் வார் 2க்கு உயிர் கொடுத்ததை உலகம் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்'' இவ்வாறு பகிர்ந்துள்ளார்

பாலிவுட்டின் மிகப்பெரிய ஸ்பை ஆக்சன் திரில்லர் படங்களில் ஒன்று ''வார் 2''. இப்படம் ஆகஸ்ட் 14ம் தேதி தமிழ், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் உலகளவில் வெளியாக உள்ளது.

# ஓய்வுக்கு பிறகு புத்தகங்களை படிக்க விருப்பம் ரஜினிகாந்த் பேச்சு



சாகித்ய அகாடெமி விருது பெற்ற எழுத்தாளரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பியுமான சு. வெங்கடேசன் எழுத்து மற்றும் ஓவியர் மணியம் செல்வன் ஓவியத்துடன் விகடன் பிரசுரத்தில் வெளியாகி 'வீரயுக நாயகன் வேள்பாரி' நாவல், விற்பனையில் ஒரு லட்சம் பிரதிகளைக் கடந்ததை முன்னிட்டு, சென்னை கலைவாணர் அரங்கில் இன்று 'வெற்றிப் பெருவிழா' நடைபெற்றது. வேள்பாரி நாவலின் ஒரு லட்சமாவது பிரதி விற்ற வெற்றி விழா சின்னத்தை நடிகர் ரஜினிகாந்த் திறந்து வைத்தார்.

விழாவில் நடிகர் ரஜினிகாந்த் பேசியதாவது:

அனைவரும் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்பத்திக் கொள்ளுங்கள். வேள்பாரி திரை வடிவத்துக்கு அனைவரையும் போல நானும் காத்திருக்கிறேன். யாருக்காக அழுதான் புத்தகத்தில் ஜெயகாந்தனின் எழுத்து வியப்பை அளித்தது. ஜாவர் சீதாராமன், சிவசங்கரி, சாண்டில்யன், கல்கி ஆகியோர் நாவல்களை படித்துள்ளேன்.

புத்தகத்தை பற்றி பேசசிவக்குமார், கமல்ஹாசன் இருக்கின்றனர். என்னை ஏன் அழைத்தார்கள். 70 வயதிலும் கண்ணாடி போட்டுக் கொண்டு நடக்கும் என்னை ஏன் அழைத்தார்கள் என தெரியவில்லை. அனுபவம் உள்ளவர்கள்தான் இயக்கத்தின் தூண்கள் என சொல்ல வந்தேன். எனக்கும் ஓய்வுக்கு பிறகு புத்தகங்களை படிக்க விருப்பம் .

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் நாவலாசிரியர் சு. வெங்கடேசன், நடிகர் ரஜினிகாந்த், விகடன் குழும நிர்வாக இயக்குநர் சீனிவாசன், நடிகை ரோகிணி, நிகழ்ச்சி நெறியாளர் கோபிநாத், இயக்குநர் ஷங்கர், மாநில நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன் மற்றும் வேள்பாரி வாசகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ''தக் லைப்'' படத்திற்கு எதிர்ப்பு: ''கமலுக்கு ஆதரவாக குரல் கொடுக்காதது ஏன்? நடிகர் துருவா சர்ஜா பதில்




கன்னட திரைப்படமான ''கேடி தி டெவில்'' படத்தின் தமிழ் டீசர் வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைபெற்றது. இதில், படக்குழுவினர் அனைவரும் கலந்துகொண்டனர்.

அப்போது ''தக் லைப்'' படத்தை கர்நாடகாவில் வெளியிட எதிர்ப்புகிளம்பியபோதுகமலுக்குஆதரவாககுரல்கொடுக்காதது ஏன் என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார் . அதற்கு நடிகர் துருவா சர்ஜா பதிலளிக்கையில்,

"எல்லோரும் அவரவர் தாய் மொழியை நேசிக்கிறார்கள். அதே போலதான் எங்களுக்கும். எங்கள் தாய் மொழிக்கு ஒன்று என்றால், கண்டிப்பாக கோபம் வரும். அந்தப் படத்தை (தக் லைப்) தவிர மற்ற படங்கள் வெளியாகவே செய்தன. எங்கள் கன்னட மக்கள், எல்லோரையும் வரவேற்பார்கள்" என்றார்

'ஆக்சன் கிங்' அர்ஜுனின் சகோதரி மகனான துருவா சர்ஜா நடிப்பில் தற்போது உருவாகியுள்ள பான் இந்திய திரைப்படம் 'கேடி தி டெவில்'. இயக்குனர் 'ஷோமேன்' பிரேம் இயக்கத்தில் காளி என்ற கதாபாத்திரத்தில் துருவா நடிக்கும் இந்த படத்தை கே.வி.என். புரொடக்சன் தயாரித்துள்ளது. ரீஷ்மா நானையா கதாநாயகியாக நடிக்கும் இந்த படத்திற்கு அர்ஜுன் ஜன்யா இசையமைத்துள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட்: உலக சாதனை படைத்த ஜோ ரூட்



இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்தும், பர்மிங்காமில் நடந்த 2வது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது போட்டி லண்டன் லார்ட்சில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பேட் செய்வதாக அறிவித்தார்.

அதன்படி பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 112.3 ஓவர்கள் தாக்குப்பிடித்த நிலையில் 387 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஜோ ரூட் 104 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகளும், சிராஜ் மற்றும் நிதிஷ் ரெட்டி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜெய்ஸ்வாலின் (13 ரன்கள்) விக்கெட்டை விரைவில் இழந்தது. இருப்பினும் கே.எல்.ராகுல் கருண் நாயர் நிதானமாக ஆடி அணியைசரிவிலிருந்துமீட்கும்முயற்சியில்ஈடுபட்டனர். இந்தியஅணியின்ஸ்கோர்74ரன்களைஎட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. கருண் நாயர் 40 ரன்களில் ஸ்டோக்ஸ் பந்துவீச்சில் ஜோ ரூட்டிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார்.

இந்த கேட்சையும் சேர்த்து டெஸ்ட் கிரிக்கெட்டில் ஜோ ரூட் இதுவரை 211 கேட்சுகள் பிடித்துள்ளார். இதன் மூலம் 148 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் அதிக கேட்சுகள் பிடித்த பீல்டர் (விக்கெட் கீப்பரை தவிர்த்து) என்ற உலக சாதனையை ஜோ ரூட் படைத்துள்ளார். இதற்கு முன்னர் இந்தியாவின் ராகுல் டிராவிட் 210 கேட்சுகள் பிடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள ஜோ ரூட் புதிய சாதனை படைத்துள்ளார்.

அந்த பட்டியல்: 1. ஜோ ரூட் 211 கேட்சுகள் 2. ராகுல் டிராவிட் 210 கேட்சுகள் 3. ஜெயவர்த்தனே 205 கேட்சுகள் 4. ஸ்டீவ் சுமித்/ஜாக் காலிஸ் 200 கேட்சுகள் 5. பாண்டிங் 196 கேட்சுகள்

# அவரை இந்திய அணி தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டும் அனில் கும்ப்ளே

இந்தியா இங்கிலாந்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3வது போட்டி லண்டன் லார்ட்சில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பேட் செய்வதாக அறிவித்தார்.

அதன்படி பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 112.3 ஓவர்கள் தாக்குப்பிடித்த நிலையில் 387 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஜோ ரூட் 104 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகளும், சிராஜ் மற்றும் நிதிஷ் ரெட்டி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து இந்திய அணி முதல் இன்னிங்சை தொடங்கி உள்ளது.

இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களின் விக்கெட்டை இந்திய ஆல் ரவுண்டர் நிதிஷ் ரெட்டி கைப்பற்றினார். இந்த இன்னிங்சில் 17 ஓவர்கள் வீசிய அவர் 62 ரன்கள் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார். அவரது இந்த செயல்பாடுகளை பல முன்னாள் வீரர்கள் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் நிதிஷ் ரெட்டி தொடர்ச்சியாக நிறைய ஓவர்கள் வீசுவது ஆச்சரியமளிப்பதாக இந்திய முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே பாராட்டியுள்ளார். எனவே நல்ல பேட்டிங் மற்றும் பீல்டிங் செய்யும் திறன் கொண்டுள்ள அவருக்கு இந்திய அணி தொடர்ச்சியாக வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டு கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "நிதிஷ் குமார் ரெட்டி எவ்வளவு சிறப்பாக பந்து வீசியதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். அவர் தொடர்ச்சியாக சரியான இடங்களில் பந்தை வீசுகிறார். ஜாக் கிராலியை அவர் அவுட்டாக்கிய பந்து அழகானது. ஆஸ்திரேலியாவில் அவர் நன்றாகச் செயல்பட்டார் என்று நான் நினைக்கிறேன். பேட்டிங்கில் சதம் அடித்தார். அதிக விக்கெட்டுகள் எடுக்காவிட்டாலும் கண்ணியமாக பந்து வீசினார். அவரைப் போன்ற ஒருவரிடமிருந்து உங்களுக்குத் தேவையானது எதிரணியின் பார்ட்னர்ஷிப்களை உடைத்து மற்ற பந்து வீச்சாளர்களுக்கு நிம்மதியைக் கொடுப்பதுதான். கிட்டத்தட்ட 14 ஓவர்கள் கொண்ட ஸ்பெல்லை வீசியது அவரது உடற்தகுதி மற்றும் கட்டுப்பாட்டைக் காட்டுகிறது.. மிகவும் இளம் பையனான அவர் ஏற்கனவே சதத்தை அடித்தவர், கூர்மையாக பீல்டிங் செய்யக் கூடியவர். எனவே மாற்றங்களைத் தவிர்த்து அவரை இந்தியா தொடர்ச்சியாகப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.